# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8081616

1. District : கரூர் PS: ஊ.த.க.பிரிவு Year: 2023 FIR No.: 07/AC/2023 Date: 11.10.2023
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 AS AMENDED IN 2018 Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 09.10.2023 Date to : நாள் வரை மதியம் சுமார் 12 1/4 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2023 Time நேரம் : 20.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.10.2023 Time நேரம் : 20.00hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிராம நிர்வாக அலுவலகம் மாவத்தூர் சுமார் 45kms தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C.இளையராஜா (b) Father's/ Husband's Name : லேட்.சிதம்பரம்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44/2023 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் பால் வியாபாரம் (g) Address : முகவரி எண்.8/78, சின்னாம்பட்டி, மாவத்தூர் அஞ்சல், கடவூர் தாலுக்கா கரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. குமார பாண்டியன், கிராம நிர்வாக அலுவலர், மாவத்தூர், கடவூர் தாலுக்கா, கரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11.10.23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 11/10/23
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.10.2023 AT 07.10 hrs

Name: பெயர் K. சிவநாதன்
Rank: இன்ஸ்பெக்டர் No. எண் ..........
[illegible]

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.07/AC/2023 u/s 7(a) of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 10.10.2023 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது திரு.C.இளையராஜா, த/பெ (லேட்) சிதம்பரம், 8/78, சின்னாம்பட்டி, மாவத்தூர் அஞ்சல், கடவூர் தாலூக்கா, கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு கணிணி மூலம் தட்டச்சு செய்த புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல், C.இளையராஜா, த/பெ (லேட்) சிதம்பரம், 8/78, சின்னாம்பட்டி, மாவத்தூர் அஞ்சல், கடவூர் தாலூக்கா, கரூர் பெறுதல், ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கரூர். அய்யா, நான் கரூர் மாவட்டம், கடவூர் தாலூக்கா, சின்னாம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளனர். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். எனது உடன்பிறந்த ஒரே அண்ணன் ரவி திருச்சியில் கூலி வேலை செய்து வருகிறார். எனது அம்மா பழனியம்மாள் எனது பராமரிப்பில் இருந்து வருகிறார். எனது அப்பா சின்னாம்பட்டி கிராமத்தில் கடந்த 1999ம் ஆண்டு ஒரு ஏக்கர் விவசாய நிலத்தை எங்க ஊரை சார்ந்த நல்லு வகையறாக்களிடம் இருந்தும் கடந்த 2000-ம் ஆண்டு 28 செண்ட் விவசாய நிலத்தை எங்க ஊரை சேர்ந்த பெரியக்காள் வகையறாக்களிடம் இருந்து விலைக்கு வாங்கி அவரது பெயரில் அந்த இரண்டு நிலத்தையும் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் செய்து கொண்டார். ஆனால் அந்த இரண்டு நிலத்தையும் அவரது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யாமலேயே விவசாயம் செய்து வந்தார். அவர் கடந்த 2018-ம் ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். நாங்கள் இறப்பு சான்றும், வாரிசு சான்றும் வாங்கி விட்டோம். அந்த நிலத்தை நாங்கள் இதுவரை பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. அதனால் நான் எனது பெயரிலும், எனது அண்ணன் மற்றும் அம்மா பெயரிலும் பட்டா பெயர் மாறுதல் வேண்டி கடந்த 7.10.2023 தேதி சனிக்கிழமை காலை ரெட்டியாபட்டியில் உள்ள இ-சேவை மையத்தில் எனது தந்தை பெயரில் உள்ள நிலத்தின் பத்திர நகல், பட்டா, வில்லங்க சான்று, இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவற்றை கொடுத்து ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். இது சம்பந்தமாக அன்று மதியம் மாவத்தூரில் உள்ள வி.ஏ.ஓ ஆபிஸிற்கு சென்று பார்த்த போது வி.ஏ.ஓ திரு.குமாரபாண்டியன் ஆபிஸில் இல்லை. அதனால் நான் எனது செல்போன் மூலம் அவரது செல்போன் எண்.9345073993 க்கு தொடர்பு கொண்டு பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக ஆன்லைன் மூலம் விண்ணப்பித்ததை பற்றி சொன்ன போது அவர் கோவிலில் இருப்பதாகவும், பிறகு பேசுவதாகவும் சொன்னார். அதன் பிறகு அன்று மதியம் வி.ஏ.ஓ திரு.குமாரபாண்டியன் அவரது செல்போன் மூலம் என்னை அழைத்து திங்கட்கிழமை ஆபிசுக்கு வந்து அவரை நேரில் பார்க்கும்படியும் மற்ற விபரத்தை அப்போது பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். அதனால் நான் 9.10.23 அன்று திங்கட்கிழமை மதியம் சுமார் 12¼ மணிக்கு மாவத்தூரில் உள்ள வி.ஏ.ஓ ஆபிஸிற்கு சென்று வி.ஏ.ஓ திரு.குமாரபாண்டியன் அவர்களை சந்தித்து நான் எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர், தனக்கு ஆபிஸ் செலவு நிறைய உள்ளது என்றும் தனது உயர் அதிகாரிகளையும் கவனிக்க வேண்டும் அதனால் தனக்கு ரூ.30000/-

கொடுத்தால் உடனே பட்டா பெயர் மாறுதல் உத்திரவு வாங்கி கொடுத்து விடுவதாகவும், இல்லை என்றால் விண்ணப்பத்தை ரிஜெக்ட் செய்து விடுவார்கள் என்றும் சொன்னார். நான் சார் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது. நானே பால் வியாபாரம் செய்து தான் குடும்பத்தை காப்பாற்றி வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.5000/-ம் குறைத்து கொண்டு ரூ.25000/-த்தை கொடுக்கும்படி கேட்டார். நான் அவரிடம் எனது குடும்ப சூழ்நிலையை சொல்லி அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்று மீண்டும் கெஞ்சினேன். அதற்கு அவர் கடைசியாக ரூ.17000/-ம் கொடுத்தால்தான் பட்டா பெயர் மாற்றம் செய்ய ரெக்கமெண்ட் செய்து உத்திரவு வாங்கி கொடுக்க முடியும் என்றும் அந்த பணத்தை இரண்டு நாட்களுக்குள் கொண்டு வந்து கொடுக்கும் படியும், இல்லையென்றால் நீ நடந்துகிட்டே தான் இருக்க வேண்டும் என்று கறாராக சொல்லிவிட்டார். எனக்கு மாவத்தூர் வி.ஏ.ஓ திரு.குமாரபாண்டியன் அவர்களுக்கு ரூ.17000/-ம் லஞ்சமாக கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லை. எனக்கு சொந்த வேலை இருந்ததால் நான் உடனே வந்து புகார் கொடுக்க முடியவில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன். எனக்கும் மாவத்தூர் வி.ஏ.ஓ திரு.குமாரபாண்டியன் அவர்களுக்கும் கொடுக்கல் வாங்கல் ஏதும் இல்லை. இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (C.இளையராஜா)10/10/2023.

Sir, Received the Computer typed complaint on 10.10.2023 at about 20.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.07/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 at 06.30hrs on 11.10.2023. Sd/-(xxxxxxxx)11.10.2023. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tr.C.Ilayaraja, S/o.Tr.Chidambaram, Door No.8/78,Chinnampatty, Mavathur Post, Kadavur Taluk, Karur District is submitted to the Hon'ble The Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(K.Saminathan) 11/10/23

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.